Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 014 | செவ்வாய்க்கிழமை Tuesday | 14.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## “ஏப்ரல் 16, 17, 18ல் காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி”

# மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி விவரிப்பு



புதுடெல்லி: கடந்த காலக் கனவுகளை நனவாக்கி, எதிர்கால லட்சியங்களைநிறைவேற்றும் என மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்த விவாதம் நடைபெறவுள்ள நிலையில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பெண் சக்தி வணக்கம் (நாரி சக்தி வந்தன்) கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் மோடி, "நமது நாட்டின் நாடாளுமன்றம் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் தருவாயில் உள்ளது.

மகளிர் இடஒதுக்கீடு சட்டம் கடந்தகால கனவுகளை நனவாக்கும்; எதிர்கால லட்சியங்களை நிறைவேற்றும் ஒரு புதிய வரலாறாகும். சமத்துவமிக்க இந்தியாவுக்கான தீர்மானம் இது. இனி சமூக நீதி என்பது வெறும் முழக்கமாக மட்டும் இல்லாமல், நமது பணி கலாச்சாரம் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறையின் இயல்பான ஒரு பகுதியாகத்திகழும் 2023-ஆம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து, 2029-ஆம் ஆண்டுக்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்ற கூட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாநிலச் சட்டப்பேரவைகள் முதல் நாட்டின் நாடாளுமன்றம் வரை, பல தசாப்தங்களாக நீடித்த காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் ஏப்ரல் 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளாகும். இந்தத் தேதிகளில்தான், சட்டத் திருத்தங்களைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்காக நீட்டிக்கப்பட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது.

2023-ஆம் ஆண்டில், புதிய நாடாளுமன்றத்தில், 'நாரி சக்தி வந்தன் சட்டம்' என்ற வடிவில் நாம் முதல் அடியை எடுத்து வைத்தோம். நமது தேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் உள்ள இந்தக் குறிப்பிடத்தக்க மைல்கற்களுக்கு மத்தியில், 21-ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றை எடுக்கும் தருவாயில் இந்தியா இன்று நிற்கிறது. இந்த முடிவு, நமது காலத்தின் மிக முக்கிய மான முடிவுகளில் ஒன்றாகத் திகழும் என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் கூறுகிறேன். இது பெண்களின் அதிகாரமளித்தலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முடிவாகும். இது பெண்மையின் வலிமைக்கும் கண்ணியத்துக்கும் செலுத்தப்படும் ஓர் உண்மையான மரியாதையாகும்.

பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் நிறைவேற்றப்படும்போது, மக்களவை இடங்களின் எண்ணிக்கை 81 6 ஆக உயருவது உறுதி செய்யப்படும். இதில் 273 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுதியுள்ள கடிதத்தில், 'மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

உடனடியாக சட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினேன். சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்குப் பிறகு திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுகிறது.

ஆனால் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தற்போது நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் தொகுதி மறுவரையறை குறித்து எந்த தகவலும் இடம்பெறவில்லை.

இந்தச் சூழலில் வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்துவது சாத்தியமில்லை. தற்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த தேர்தல்கள் முடிந்த பிறகு ஏப்ரல் 29-ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும். அதில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். மகளிருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்டியிருப்பது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி ஆகும்' என்று கார்கே தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.




# எங்கள் கட்சி பாஜகவுக்கு அடிமை என்கிறார். ஆனால், அதிமுக தொண்டன் கூட யாருக்கும் அடிமை கிடையாது; எடப்பாடி பழனிசாமி பேச்சு



நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, வேதாரண்யம், கீழ்வேளூர் ஆகிய 3 சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: புதுக்கோட்டையில் பேசிய திமுக தலைவர் ஸ்டாலின் நாட்டு மக்களுக்கு எதையும் சொல்லவில்லை. என்னைப் பற்றி என்னவெல்லாம் அவதூறு பேச முடியுமோ அவ்வளவு பேசி இருக்கிறார்.

எங்கள் கட்சி பாஜகவுக்கு அடிமை என்கிறார். ஆனால், அதிமுக தொண்டன் கூட யாருக்கும் அடிமை கிடையாது. 'வின்னர்' என்று ஒரு திரைப்படம் வந்தது. அந்தப் படத்தில் நகைச்சுவை காட்சியில் ஒரு வசனம் இருக்கும். கட்டதுரை திருந்துவது மாதிரியே இல்லை என்று ஒரு வசனம் வரும். அதேபோன்ற நிலைமைதான் இப்போது இருக்கிறது. அதைப் பற்றி நான் அதிகம் பேசுவது நாகரிகமாக இருக்காது.

தமிழகத்தில் இண்டியா கூட்டணி கட்சிகள் ஒற்றுமையாக இருப்பதாக பேசுகிறார்கள். ஆனால், புதுச்சேரியில் தனித்தனியாக நிற்கிறார்கள். மக்களை ஏமாற்றும் இந்த நாடகம் ஒருபோதும் எடுபடாது. மக்களை குறைத்து எடை போடாதீர்கள். மக்கள் அறிவு கூர்மையானவர்கள். எது சரி தவறு என்று சிந்தித்து முடிவு எடுக்கக் கூடிய ஆற்றல் மிக்கவர்கள்.

பழனிசாமி சாதனைகளைப் பற்றி பேசுவதில்லை, அவருக்கு கொள்கை கிடையாது என்று முதல்வர் பேசியிருக்கிறார். அதிமுக அரசில் குறுவை சாகுபடிக்கு காப்பீட்டு திட்டம் கொண்டு வந்தோம். ஆனால், திமுக ஆட்சியில் குறுவைக்கு காப்பீடு திட்டம் கொண்டு வரவில்லை. திமுகவின் சாதனை, 4 ஆண்டுகளில் ஊழல் செய்தது தான்.

நான் ஏற்கனவே சவால் விட்டிருக்கிறேன். இப்போது, அதிமுக ஆட்சியின் சாதனைகளை பட்டியலிட்டு சொல்கிறேன். ஸ்டாலின் முதல்வர் ஆனபிறகு என்னென்ன சாதனைகள் என்று செய்திருக்கிறோம் என்று சொல்லட்டும்.

மக்களிடம் விளக்குங்கள். மக்கள் தீர்ப்பு கொடுக்கட்டும். தமிழகத்தில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் கொண்டு வந்தோம்.

ஸ்டாலினின் 5 ஆண்டு ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியை கூட கொண்டு வர முடியவில்லை. 10 ஆண்டுகளில் 17 அரசு மருத்துவக் கல்லூரிகள், 7 சட்டக் கல்லூரிகள், 27 பாலிடெக்னிக் கல்லூரிகள், 68 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள், 4 வேளாண் கல்லூரிகள், 5 கால்நடை மருத்துவ கல்லூரி, 1,200 கோடியில் மிகப்பெரிய கால்நடை பூங்கா கொண்டு வந்தோம். உலமாக்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தப்பட்டது. இருசக்கர வாகனம் வாங்க மானியம் தரப்பட்டது.

கண்ணை இமை காப்பது போல, சிறுபான்மை மக்களை நாங்கள் காப்போம். சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரே இயக்கம் அதிமுக.

இவ்வாறு அவர் பேசினார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# பெண்கள் மீதான தாக்குதல் கண்டிக்கத்தக்கது பொள்ளாச்சி ஸ்டிக்கர் விவகாரத்தில் தவெக தலைவர் விஜய் கண்டனம்

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே, வீட்டு உரிமையாளரின் அனுமதியின்றித் தங்களது கட்சி ஸ்டிக்கரை ஒட்டியதோடு, அதனைத் தட்டிக்கேட்ட பெண்களைத் தாக்கிய கும்பலுக்குத் தமிழக வெற்றிக் கழகத் (தவெக) தலைவர் ஜோசப் விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மகளிர் மீதான இந்தத் தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என அவர் தனது எக்ஸ் (X) தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பொள்ளாச்சி அருகே ஒரு சகோதரியின் வீட்டுச் சுவரில், அனுமதியின்றிச் சிலர் கட்சி ஸ்டிக்கர் ஒட்டியுள்ளனர். இதைத் தட்டிக்கேட்ட அந்த வீட்டின் உரிமையாளர் மற்றும் கைக்குழந்தையுடன் இருந்த மற்றொரு பெண் ஆகியோரை அந்த கும்பல் தாக்கியுள்ளது.



தகாத வார்த்தைகளால் பேசிப் பெண்களை மிரட்டிய இந்தக் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அராஜகப் போக்கு குறித்து விஜய் தனதுபதிவில்கூறியுள்ளதாவது:விசில்புரட்சியால் வெற்று விளம்பர மாடல் ஆட்சி(DMK) அவ்வளவுதான், இனி கல்லாப் பெட்டியை நிரப்ப முடியாது என்கிற கோபத்தில் சிலர் இருக்கின்றனர். வாக்குப் பதிவுக்கு இன்னும் சில தினங்களே இருக்கும் நிலையில், தோல்வி பயத்தால் பொதுமக்களை அவர்கள் அச்சுறுத்தி வருகின்றனர். வீட்டில் தனியாக இருக்கும் பெண்களை அவதூறாகப் பேசி மிரட்டுவதை ஏற்க முடியாது. வீட்டுச் சுவரில் அனுமதியின்றி ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது என்ற தேர்தல் விதிமுறை உள்ளதைச் சுட்டிக்காட்டிய விஜய்: இந்த அடாத செயலில் ஈடுபட்டவர்களைக் காவல் துறை உடனடியாகக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய அராஜகப் போக்கைத் தடுத்து நிறுத்தி, மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

வாக்குப் பதிவு நெருங்கும் வேளையில் இத்தகைய மிரட்டல்கள் அதிகரிப்பதைத் தடுக்கத் தேர்தல் ஆணையம் தனது கண்காணிப்புப் பணிகளை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். விஜய்யின் இந்த அதிரடி அறிக்கை, தேர்தல் களத்தில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதத்தைத் தமிழகத்தில் மேலும் சூடுபடுத்தியுள்ளது.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்

14.04.2026

### தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்

# "மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம் செடி வளர்த்த மாணவர்களுக்கு பாராட்டு விழா"



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில், சிறப்பாக செடி வளர்த்த மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியை முத்துலட்சுமி வரவேற்புரை வழங்கினார். தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். சிவகங்கை மாவட்ட வனத் திட்ட அலுவலர் சாந்தி கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

பின்னர் பேசுகையில், "மரங்களை வளர்த்தால் மழை கிடைக்கும்; மழை இல்லையெனில் விவசாயம் பாதிக்கப்படும். விவசாயம் பாதித்தால் பொருளாதாரம் குறையும்; அதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். எனவே மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டியது அவசியம்" என்று வலியுறுத்தினார். மேலும், மரங்கள் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி ஆக்சிஜனை வெளியிடுகின்றன. நாம் சுவாசிக்கும் சுத்தமான காற்றை மரங்களே வழங்குகின்றன. மரங்கள் இல்லையெனில் காற்று மாசுபட்டு, மனிதர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இளம் வயதில் உள்ள மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருஆண்டும் குறைந்தது ஒரு மரம் வளர்த்தால், சில ஆண்டுகளில் பல மரங்களை வளர்க்க முடியும். குறிப்பாக அரசமரம் சுற்றியுள்ள பகுதிகளில் சுத்தமான காற்று கிடைக்கும் என்பதால், பழங்காலத்தில் அரசமரத்தை வழிபட்டனர் என்றும் அவர் கூறினார்.

எதிர்காலத்திலும் மாணவர்கள் மரம் வளர்ப்பை தொடர்ந்து மேற்கொண்டால், அடுத்த ஆண்டும் அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என மாவட்ட வன திட்ட அலுவலர் பேசினார்.

கடந்த ஒரு ஆண்டாக தங்களது வீடுகளில் தொடர்ந்து செடிகளை வளர்த்த மாணவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் நிறைவாக ஆசிரியை முத்துமீனாள் நன்றியுரை வழங்கினார்



தேனிமாவட்டம்போடிநாயக்கனூர்சட்டமன்றதொகுதிக்குஉட்பட்டபோடிநாயக்கனூர் சிசம் ஸ்கூல் அருகில் உள்ள சர்ச்சில் சம்மந்தப்பட்ட சர்ச் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களை தமிழக முன்னாள் முதல்வர், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேரில் சந்தித்து அவர்களின் தேவைகள் மற்றும் குறைகளை கேட்டு அறிந்த பின் 2026 போடிநாயக்கனூர் சட்டமன்றத் தேர்தலில் பெறுவரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தங்களது பேராதரவு தருமாறு கேட்டுக்கொண்டார் .

# ஓமலூரில் பாமக தேர்தல் அலுவலகம் திறப்பு



சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் ஐயா ராமதாஸ் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கேஸ் சிலிண்டர் சின்னத்தில் S.சுரேஷ்குமார் வேட்பாளராக போட்டியிடும் நிலையில் , (13.04.2026) ஓமலூர் - தருமபுரி மெயின் ரோட்டில் தேர்தல் கட்சி அலுவலகம் அடிக்கல் நாட்டப்பட்டு திறக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் V.E.ராஜேந்திரன் தலைமை தாங்கி ரிப்பன் வெட்டி இனிப்பு வழங்கி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வேட்பாளர் சுரேஷ்குமார், மாநில இளைஞர் அணி செயலாளர் துரை செந்தில், மாவட்ட பொருளாளர் பரணிதரன், மகளிர் அணி ஜனனி, ஒன்றிய செயலாளர் சக்திவேல், பிரகாஷ், விக்னேஷ், ராமஜெயம், பிரவீன், கண்ணன், சங்கர், மணி, சாய், குமார், சமூக ஊடகப் பேரவை பழனி, சந்திரசேகரன், வெங்கடாஜலபதி, சசிகலா, முருகன், மதன்குமார், கோவிந்தன், கட்சி நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். புதிய தேர்தல் அலுவலகம் மூலம் தேர்தல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.



திருநெல்வேலி மாவட்டம் மானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் ஜோசப் ஜாண் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 11042026 சனிக்கிழமை மானூர் அரசு கல்லூரியில் நடைபெற்றது. பாராட்டு விழாவில் மானூர் அரசு கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி பேராசிரியர்கள், சுரண்டை காமராஜர் அரசு கல்லூரி பேராசிரியர்கள், இராமநாதபுரம் மாவட்டம் சேதுபதி அரசு கலைக் கல்லூரி பேராசிரியர்கள், நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் மற்றும் தற்போது பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்களாக பணியாற்றும் முனைவர் ஜோசப் ஜாண் அவர்களின் முன்னாள் B.Sc., M.Sc., Ph.D., Students கலந்து கொண்டு பாராட்டினார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் மத்தூர் ஆஇஅதிமுக ஒன்றிய செயலாளர்கள்நரேஷ் குமார் கே சக்கரவர்த்தி தலைமையில் ஓலைப்பட்டி பெரிய ஜோகிப்பட்டி சாலா ஜோகிபட்டி கிராமங்களில் ஊத்தங்கரை தனி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டி எம் தமிழ்செல்வம் அவர்கள் கிராம மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார். மேலும் அதிமுக சிட்டிங் எம்எல்ஏ வேட்பாளருக்கு கிராம பொதுமக்கள் மற்றும் அதிமுக கட்சி தொண்டர்கள் பெண்கள் ஆரத்தி எடுத்து பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்றினார்கள்உடன் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ராஜாமணியின் நரசிம்மன் முன்னாள் கிளைக் கழக செயலாளர் ஜே ஜே பிரபுஅந்தேரிபட்டி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் சி.தட்சிணாமூர்த்தி வைஜயந்தி ராமமூர்த்தி பத்மா திருவேங்கடம் மற்றும் அதிமுக கிளை செயலாளர் கோவிந்தசாமி எம்.கிருஷ்ணன் வெங்கடேசன் என்கின்ற சேட்டு ஊத்தங்கரை பணிமனை அண்ணா தொழிற்சங்கம் இணைச் செயலாளர் குமார் என்கின்ற குமரேசன் பெரிய ஜொகிப்பட்டி கழக தொண்டர்கள் சக்திவேல்மற்றும் கூட்டணிகட்சி தொண்டர்கள் கராத்தே ரவி ஜி நரசிம்மன் சக்தி ராஜேந்திரன் பிரசாந்த் திமராயன் மாரிமுத்து வடிவேல் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

# வடுகபட்டி பேரூராட்சியில் விசிக வேட்பாளர் பானை சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பு



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி பேரூராட்சியில் பேரூராட்சி, தலைவர் நடேசன் அவருடைய அலுவலகத்தில் அனைத்து கட்சி பேரூராட்சி பொறுப்பாளர்கள் அனைவரும் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சக்திவேல் வருகை தந்துமரியாதைநிமித்தமாகசால்வை அணிவித்து உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி எம் எல் ஏ தேர்ந்தெடுத்தால் அடிப்படை வசதி, பேரூராட்சி அடிப்படைத் தேவைகள், துப்புரவு பணியாளர்களுக்கு அவர்களின் குறைகளை கண்டறிந்து தீர்க்கப்படும், அத்தியாவசியமான குடிநீர் பிரச்சனை முழுமையாக சரி செய்து தரப்படும், ஏழை எளிய பொதுமக்களுக்கு அவர்களின் அடிப்படை பிரச்சனைகள் இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும் என்னையே சந்திக்கலாம் என உறுதி அளித்தனர், பல்வேறு அத்தியாவசிய தேவைகளை உடனடியாக தனி கவனம் செலுத்தி நான் தீர்த்து தருவேன்என்றுவேட்பாளர் சக்திவேல் உறுதியாக சொன்னார். எனக்கு பானை சின்னத்தை வெற்றி பெற வைக்குமாறு உங்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் என்று அனைவரிடமும் வாக்குகள் சேகரித்தனர்பேரூராட்சிமேலிட பொறுப்பாளர் தமிழ்வாணன் மாவட்ட செயலாளர் சுசி தமிழ் பாண்டி மூ.ஆண்டவர் சட்டமன்ற தொகுதி துணை செயலாளர் மு கார்த்திக்பேரூர்,செயலாளர் எட்டாவது வார்டு செயலாளர் சௌந்தரபாண்டியன் 13 வது வார்டு செயலாளர், கார்த்திக், இலக்கிய கண்ணன், தங்கபாண்டி, மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டுவாக்குகளை சேகரித்தனர்.

### சின்னமனூர் ஒன்றிய இளைஞரணி துணைச்செயலாளர் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட

# ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் அங்கிருந்து விலகி அதிமுகவில் தங்களை இணைந்து கொண்டனர்

தேனி மாவட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் 25க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்த நிலையில் அவரது ஆதரவாளர்களும் அவருடனே சென்று திமுகவில் இணைந்தனர்

இந்தநிலையில்ஓபிஎஸ் அணியில் இருந்த சின்னமனூர் இளைஞர் அணி துணைச் செயலாளர் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் அங்கிருந்து விலகி அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர் பழனிசெட்டிப்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில் போடி தொகுதி அதிமுக வேட்பாளர் நாராயணசாமி முன்னிலையில் 25க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இனைத்துக்கொண்டனர் அதிமுகவில் இணைந்த ஓபிஎஸ் ஆதரவாளர்களுக்கு அதிமுகவழங்கிபோடி வேட்பாளர் நாராயணசாமி வரவேற்றார்



### ஆசாரிப்பள்ளம் காவல் நிலையம் முன்பு

# பொதுமக்கள் வாகன ஓட்டிகளை அச்சுறுத்தும் பேரிகார்டர்



கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையம் முன்பு சில நாட்களாக வைக்கப்பட்டுள்ள பேரிகார்டரால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக அந்தப் பகுதி அரசு பேருந்துகள் திரும்பும் இடமாகவும் அருகில் பெட்ரோல் பங்க் இருப்பதாலும் வாகன நெரிசல் அதிகமாக காணப்படுகிறது.

மேலும் ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செல்லும் ஆம்புலன்ஸ் வாகனங்களும் இதே சாலையை பயன்படுத்துகின்றன. இவ்வாறு பரபரப்பான பிரதான சாலையை பாதியை மறைக்கும் வகையில் இந்த பேரிகார்டர் வைக்கப்பட்டிருப்பதால் வாகனங்கள் ஒருவழிப்பாதையைப்போலசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் நடந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் முதியோர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். விபத்துகள் நடைபெறுவதற்கு முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகநடவடிக்கைஎடுத்து இந்தபேரிகார்டரை அகற்ற வேண்டும் என்பது பொதுமக்கள் வாகன ஓட்டிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

# வாக்களிப்போம் திராவிட மாடல் ஆட்சிக்கு திமுக ஆட்சியில் மகளிர் முன்னேற்றம்

### முன்னாள் மகளிர் அணி அமைப்பாளர் தமிழ்ச்செல்வி முருகேசன் வேண்டுகோள்



தமிழகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் மகளிரின் பங்கு மிகவும் முக்கியமானது. இத்தகைய நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) ஆட்சி காலங்களில் மகளிர் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.ஆகவே தொடர்ந்து திராவிடம் மாடல் ஆட்சி மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் தொடர மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டுமென கடையநல்லூர் நகர முன்னாள் மகளிர் அணி துணை அமைப்பாளரும் 17-வது வார்டு நகர மன்ற உறுப்பினருமான தமிழ்ச்செல்வி முருகேசன் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

முதன்மையாக, பெண்களின் கல்வி மேம்பாட்டிற்கு திமுக அரசு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளது. பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் விகிதம் அதிகரிக்க பல ஊக்கத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இலவச கல்வி, புத்தகங்கள், சீருடைகள் போன்ற வசதிகள் மூலம் பெண்கள் கல்வியில் முன்னேற வழிவகை செய்யப்பட்டது.

அடுத்ததாக, பெண்களின் பொருளாதார சுயநிலையை மேம்படுத்தும் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. சுய உதவி குழுக்கள் (Self Help Groups) மூலம் பெண்களுக்கு சிறு கடன் வசதிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டனர். இதன் மூலம் கிராமப்புற பெண்கள் உட்பட பலர் தன்னிறைவு அடைந்தனர்.

முடிவாக, திமுக ஆட்சியில் மகளிர் முன்னேற்றம் பல துறைகளில் கணிசமாக உயர்ந்துள்ளது என்று கூறலாம். கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. எதிர்காலத்திலும் இதே போன்று பெண்கள் முன்னேற்றத்திற்கு மேலும் பலதிட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும்.என்றால் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும்எதிர் அணியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தென்காசி மாவட்ட ஆட்சிய அலுவலகத்தைதிறக்கமுடியவில்லைஎன்று ஊர் ஊராக உளறி வருகின்றனர் அண்ணா திமுக ஆட்சியில் தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குஅடிக்கல்நாட்டப்பட்டதுமுறையான சுற்றுச்சூழல் மற்றும் பசுமை அனுமதி வாங்கப்படாததால் நீதிமன்றத்தில் ஒருவர் செய்த வழக்கின் காரணமாக 119 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அலுவலகம் திறக்கப்படாமல் உள்ளதுஎன்பதை தெரிந்து கொள்ளுங்கள் ஒரு சிலரின் சுயநலத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆயிரப் பேரி பக்கத்தில்வயல்வெளிகள் அமைந்த இடத்தில் அமைய இருந்தது அப்போதைய தென்காசி மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவத்மநாபன்அவர்களின் போராட்டத்தின் காரணமாக அனைவரும் வந்து செல்லும் புதிய பேருந்து நிலையம் அருகே கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது தொடர்ந்து மக்கள் நலனுக்காக பாடுபடும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழக இயக்கம்பள்ளி குழந்தைகள் கல்லூரி மாணவ மாணவிகள் இல்லத்தரசிகள் என அனைத்து தரப்பு மகளிருக்கு அரசின் நலத்திட்டங்களை தந்தது திமுகழகம் அந்த ஆட்சி தொடர மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கடையநல்லூரில் திமு ராசேந்திரனுக்கும்தென்காசியில் மருத்துவர் கலைக்கதிர்வன் அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்



தூத்துக்குடியில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். 2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக வேட்பாளர்களை ஆதரித்து இந்த பிரச்சாரத்தை மேற்கொள்கிறார். இதையடுத்து, தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத்தலைவர் இசக்கிமுத்து மற்றும் முத்தரையர் கனவாமீன்பிடிநலசங்கபொருளாளர்எஸ்.ஆர்.சந்தனராஜ்ஆகியோர்திமுகதுணைப்பொதுச்செயலாளரும்,நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மற்றும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் கீதாஜீவன் நேரில் சந்தித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தூத்துக்குடிவருகைவரவேற்புகுறித்துஆலோசனைபங்கேற்றனர்.நிகழ்ச்சியில்தூத்துக்குடிமாவட்டஅண்ணாசங்குகுளி தொழிற்சங்கதுணைத்தலைவர்மாரிலிங்கம்,செயலாளர்முருகையா,ஆலோசகர்எஸ்.ஆர்.சந்தனராஜ்மகாராஜா,அகமது மாற்று முத்தரையர் கனவா மீன்பிடி நல சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் பெ.கீதாஜீவனுக்கு வாக்கு சேகரிப்பில் 42வது வார்டு பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மற்றும் மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி தலைமையில் தூத்துக்குடி மாநகரில் சண்முகபுரம் முதல் தெரு இரண்டாவது தெரு, வண்ணார்தெருஆகியபகுதிகளில்வீடுவீடாகசென்றும்சாலையோரகடைவியாபாரிகள்அனைவரிடமும்தூத்துக்குடியில் நிலையை எடுத்துக் கூறி தமிழக அளவில் திமுக வரவேண்டியதன் அவசியத்தையும் சமூக நலத்துறை அமைச்சராக தங்களது பணியை சிறப்பாக செய்திருக்கும் அமைச்சர் கீதாஜீவன் செய்த சேவைகளையும் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு 42வது வார்டு பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மற்றும் மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி பிரச்சாரத்தில் வாக்கு சேகரித்தார்கள்.

# விவசாய நிலங்களைப் பாதிக்காமல் நான்குவழிச் சாலை அமைக்கப்படும்

## மீட்புக் குழுவிடம் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி உறுதி



விவசாய நிலங்களைப் பாதிக்காமல் நான்கு வழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான்குவழிச்சாலை மீட்புக் குழுவிடம் வாசுதேவநல்லூர் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி உறுதி அளித்தார்.இதையடுத்து மீட்புக் குழுவினர் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

கொல்லம் டூ திருமங்கலம் நான்குவழிச் சாலை பணியை ராஜபாளையம் முதல் செங்கோட்டை வரை மாற்றுப் பாதையில் அமைக்கக் கோரி வாசுதேவநல்லூர் என்எச் 744 நன்செய் மீட்பு மற்றும் சாலை மாற்றமைப்பு சங்கம் பல ஆண்டுகளாக தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது. தற்போது நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் தங்களது கோரிக்கைக்கு குரல் கொடுக்கும் கட்சிக்கு ஆதரவு அளிக்க திட்டமிட்ட இச்சங்கத்தினர் தேசிய ஜனநாயக கூட்டணியின் வாசுதேவநல்லூர் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமியை, விஸ்வநாதப்பேரியில் உள்ள அவரது வீட்டிற்கு நேரில் வந்து சந்தித்து, நான்குவழிச்சாலை திட்டத்தால் விவசாய நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாவதை எடுத்துக் கூறினர். இச்சாலை மாற்றுப் பாதையில் அமைக்கப்பட்டால் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்.உணவு மற்றும் நீராதாரங்கள் அழிவில் இருந்து காக்கப்படும். விவசாய நிலங்களும் காப்பாற்றப்படும் என்று முறையிட்டனர்.


நான்குவழிச்சாலை மீட்புக் குழுவினரின் கோரிக்கையை முழுமையாக கேட்டறிந்த பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி, தான் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஆனதும் உடனடியாக இவ்விவகாரத்தில் கவனம் செலுத்தி விவசாய நிலங்களைப் பாதிக்காமல் நான்குவழிச்சாலை அமைக்க அனைத்து முயற்சிகளையும் செய்வேன். மத்திய அரசிடம் பேசி விவசாயிகளை காக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்று உறுதி அளித்தார்.

இதையடுத்து குழுவினர் அனைவரும் ஒன்றிணைந்து பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமிக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற விவசாயிகள் அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

பாஜக வேட்பாளருடனான இந்த சந்திப்பில் வாசுதேவநல்லூர் என்எச் 744 நன்செய் மீட்பு மற்றும் சாலை மாற்றமைப்பு சங்க தலைமை ஆலோசகர் ஜாஸ்பர் ஜெயராமன், இணை ஆலோசகர்கள் முருகன், நமச்சிவாயம், தலைவர் மீரான் கனி, செயலாளர் சரவணகுமார், பொருளாளர் பார்த்தசாரதி, துணை செயலாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் பாஜக மாநில நிர்வாகி விவேகானந்தன், பாஜக ஒன்றிய தலைவர்கள் கணேசன், மகாலிங்கம், அதிமுக ஒன்றிய செயலாளர்கள் துரை பாண்டியன்,இராஜாராம்பாண்டியன்,முத்துவேல்சாமி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்ட காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் நியமனம்

## முதன்மை மாவட்ட நீதிபதி அறிவிப்பு



தென்காசி மாவட்ட காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பது தொடர்பாக சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் நியமனம் நடைபெறுகிறது என தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரும், முதன்மை மாவட்ட நீதிபதியுமான பி.ராஜவேல் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

உச்ச நீதிமன்ற உத்தரவின்படியும், தமிழ்நாடு அரசு உத்தரவின் படியும், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் கீழ் தென்காசி மாவட்ட காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகளுக்கான, சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அதன்படி தென்காசி, குற்றாலம்,செங்கோட்டை, புளியரை, அச்சன்புதூர், ஆய்க்குடி, சாம்பவர்வடகரை,இலத்தூர்,சுரண்டை, வீரகேரளம்புதூர், ஊத்துமலை, பாவூர்சத்திரம், கடையம், ஆழ்வார்குறிச்சி, சங்கரன்கோவில், சங்கரன்கோவில் டவுன், சின்ன கோவிலான்குளம், குருவிகுளம், பனவடலி சத்திரம், சேர்ந்தமரம், கரிவலம்வந்தநல்லூர், திருவேங்கடம், அய்யாபுரம், சிவகிரி, வாசுதேவநல்லூர், புளியங்குடி, சொக்கம்பட்டி, கடையநல்லூர் ஆகிய காவல் நிலையங்களிலும், தென்காசி, புளியங்குடி, சங்கரன்கோவில் ஆலங்குளம் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் நியமிக்கப்பட உள்ளனர். 25 முதல் 65 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். வருகை ஒன்றுக்கு ரூ.1,000ம் வீதம் ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000ம் வரை மதிப்பூதியம் வழங்கப்படும். இப்பணிக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 27.04.2026 ம் தேதி ஆகும்.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்கு பட்டியலிட படுவார்கள். அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீடிக்கப்படலாம்.

விசாரணையின் போது உதவுதல், மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களை பெறுதல், காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், மீட்கப்பட்ட குழந்தைக்கு பிந்தைய கால ஆதரவு அளித்தல், நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல் போன்றவைகள் சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் தொடர்பான கடமைகளாகவும், பொறுப்புகளாகவும் இருக்கின்றன.

தகுதியுள்ள விருப்பமுள்ளவர்கள் தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் விண்ணப்பங்களை பெற்று நிரப்பி பதிவு தபாலிலோ, நேரிலோ 27.04.2026 ம் தேதி அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்கப் பெறுமாறு அனுப்ப வேண்டும். கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நேர்காணல் தேதி மற்றும் இதர தகவல்கள் Tenkasi ecourt Website -இல் தெரியப்படுத்தப்படும். மேலும் விபரங்களுக்கு தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அல்லது வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம். இவ்வாறு தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரும், முதன்மை மாவட்ட நீதிபதியுமான பி.ராஜவேல் தெரிவித்துள்ளார்.

# விருத்தாச்சலம் பழமலைநாதர் கோயிலில் 5வது மாதமாகத் தொடரும் சிறப்பு அன்னதானம்:

## கொளப்பாக்கம் இளையராஜாவின் நற்பணிக்குக் குவியும் பாராட்டு



கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயிலுக்குச் சுவாமி தரிசனம் செய்ய வரும் முதியவர்கள், குழந்தைகள், ஏழைகள் மற்றும் பொதுமக்களின் பசிப்பிணியைப் போக்கும் வகையில் ஏப்ரல் 11 சனிக்கிழமை சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. இந்த சிறப்பு அன்னதானத் திட்டம் எவ்வித தடையுமின்றி நான்கு மாதங்கள் கடந்து தற்போது ஐந்தாவது மாதமாக வெற்றிகரமாகத் தொடர்கிறது.

ஓம் சக்தி ரியல் எஸ்டேட், நெல் அறுவடை இயந்திரம் மற்றும் எர்த் மூவர்ஸ் ஆகிய நிறுவனங்களின் நிறுவனரான கொளப்பாக்கம் இளையராஜா தலைமையில் முன்னெடுக்கப்படும் இந்தநற்பணியின்மூலம், வாரந்தோறும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில்மதியவேளையில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்குச் சிறப்பான முறையில் உணவு பரிமாறப்படுகிறது. வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ள இத்தகைய அறப்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் ஒருங்கிணைப்பாளர் கொளப்பாக்கம் இளையராஜா மற்றும் அவரது குழுவினரைப் பொதுமக்கள் நெஞ்சாரப் பாராட்டிச் செல்கின்றனர்.

# கொங்கு மண்டலம் கள நிலவரம் ஒரு சீட்டு கூட அதிமுக ஜெயிக்காது

## புரட்சி அண்ணா திமுக நிறுவனர் புகழேந்தி ரேஸ்கோர்ஸ் பகுதியில் செய்தியாளர்களுக்கு பேட்டி



புரட்சி அண்ணா திமுக நிறுவனர் புகழேந்தி ரேஸ்கோர்ஸ் பகுதியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது பேசிய அவர், கோவையை சுற்றி வந்துள்ளோம் கொங்கு மண்டலம் கள நிலவரம்- ஒரு சீட்டு கூட அதிமுகஜெயிக்காது எடப்பாடியார், வேலுமணி கூட ஜெயிக்கமாட்டார்கள் என்றார். எடப்பாடி பழனிசாமி இல்லாமல் வேறு யாராவது தலைமை இருந்திருந்தால் டப் கொடுத்திருக்கலாம் என்றும் கூறினார்.

இண்டி கூட்டணி பலமாக உள்ளது என்றும் கூட்டணியில் உள்ள கட்சி தான் எதிர்கட்சியாக வரும் என்றும் தேர்தல் விதிமுறையை மீறிபேசகூடாது,ஆனால் அதன் எல்லையை மீறிவிட்டார் எடப்பாடி பழனிச்சாமி, திமுக ஆட்சியில் வெள்ளம், கொரோனா வந்ததா என எடப்பாடி கேட்கிறார், நல்லவர் ஆட்சியில் அது வராது உங்களுடைய ஆட்சியில் தானே வரும முதல்வரை பார்த்து கொரோனா வந்தால் போயிருப்பார் என எடபாடி கூறுகிறார் நம் குடும்பத்தில் யாராவது இருந்தால் அதுபோல் பேசுவோமா? என கூறினார்.

அதுமட்டுமின்றி எடப்பாடி பழனிச்சாமி துணை முதல்வரையும் விமர்சிக்கிறார்

தேர்தல் ஆணையம் எடப்பாடி பழனிச்சாமி பேசுவதை வேடிக்கை பார்க்கிறது என்றார்.

அப்துல் கலாம் கனவு காண சொன்னார் என்றால் இங்குள்ள ஒரு குடிகார பையன்(சிவி சண்முகம்) நயன்தாரா வேண்டும் என கூறுகிறான் உள்ளாட்சியில் நல்லாட்சி செய்திருந்தால் ஏன் மாநகராட்சி தேர்தலில் அதிமுக தோற்றது? என கேள்வி எழுப்பினார்.

திண்டுக்கல் சீனிவாசனுக்கு புடவை அளிக்கிறார்கள் ஆனால் பாவாடை தரவில்லை என கேவலமாக பேசுகிறார் நான் வழக்கு பதிவு செய்துள்ளேன் பழனிச்சாமி பரப்புரை நிறுத்தப்படும் என்றார். அதிமுகவில் கேவலமான அரசியல் நடக்கிறது என்றும் எடப்பாடி பழனிச்சாமிகலவரத்தை தூண்ட முயல்கிறார் என்றும் கூறினார்.

நான் எந்த காலகட்டத்திலும் கலைஞரை தவறாக பேச மாட்டேன், அதே போல் அவர்களும் அம்மாவை பேச மாட்டார்கள்

மதசார்பற்ற இண்டி கூட்டணி வரவேண்டும், அண்ணாமலைக்கே ஆப்பு, அல்வா கொடுத்து ஓரமாக அமர வைத்து விட்டார்கள் என கூறினார்.

பழனிச்சாமி என்ற தலைமை மாறினால் டப் இருக்கும்,ஆனால் எடப்பாடிபழனிச்சாமிதொகுதியே ஆட்டம் காண போகிறது என்றார். தவெக குறித்து பேசிய அவர் கூட்டணிக்கு வருமா வராதா என்பதை விஜய்தான் முடிவுசெய்ய வேண்டும் என்றார்.

செங்கோட்டையனால் தவெகவில் சுதந்திரமாக செயல்படமுடியவில்லை என்றும் விஜய் மதியத்திற்கு மேல் வெளியே செல்வதில்லையே மக்கள் அதனை எதிர்பார்ப்பார்கள் அல்லவா என்றார்.

ஜனநாயகன் படம் லீக் ஆனது தொடர்பான கேள்விக்கு மத்திய அரசு கையில் சென்சார் கையில் உள்ளது, சினிமாவை தடை செய்து எல்லாம் அரசியல் செய்ய கூடாது (ஜனநாயகன்) நான் இன்னும் ஆன்லைனில் படம் பார்க்கவில்லை, பார்த்து விட்டு கூறுகிறேன் என்றார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (12.04.2026) அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு பகுதியிலிருந்து 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (13.04.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில், ஏப்ரல் 14ம் நாள் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு, "சமத்துவ நாள்" உறுதிமொழியினை அனைத்துதுறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி உட்பட பலர் உள்ளனர்.

### கோவையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கிக் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டி,

# 6 வயது முதலான பள்ளி இளம் வீரர், வீராங்கனைகள், ஆர்வமுடன் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர்




கோவை மாவட்ட கிக் பாக்சிங் ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் மற்றும் தமிழ்நாடு மாநில அமெச்சூர் கிக் பாக்சிங் அசோசியேஷன் இணைந்து, மாவட்ட அளவிலான கிக் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டிகள் கோவை, குனிய முத்தூர்பகுதியில் உள்ள பிரேம் எம்.எம்.ஏ. அகாடமி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கோவை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளம் வீரர், வீராங்கனைகள் உற்சாகமாக பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆறு வயது முதலான பள்ளி மாணவர்கள் துவங்கி 20 வயதுக்கு மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் வரை பல்வேறு வயது மற்றும் எடைப்பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. வீரர்களின் தைரியம், கட்டுப்பாடு மற்றும் நுட்பமான தாக்குதல்-தடுப்பு திறன்கள் என நடைபெற்ற கிக் பாக்சிங் போட்டிகள் பார்வையாளர்களை கவர்ந்தன.

இது குறித்து கோவை மாவட்ட கிக் பாக்சிங் விளையாட்டு சங்க நிர்வாகிகள் பிரேம் குமார், பிராங்க்ளின் பென்னி, மற்றும் புகழேந்தி ஆகியோர் கூறுகையில்,கிக் பாக்சிங் விளையாட்டில் இளம் வயதினரின் ஆற்றலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் விதமாக போட்டிகள் நடைபெற்றதாகவும், அனைத்து விதமான பாதுகாப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு, பயிற்சியாளர்கள் மற்றும் நடுவர்களின் கண்காணிப்பில் போட்டிகள் ஒழுங்காக நடத்தப்பட்டதாக தெரிவித்தனர்..

இதில் தேர்வு செய்யப்படும் வீரர், வீராங்கனைகள் விரைவில் தேனியில் நடைபெற உள்ள மாநில அளவிலான கிக்பாக்சிங் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவித்தனர். தொடர்ந்து வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு ஆஸ்ரம் பள்ளி நிர்வாகி கவுரி உதயேந்திரன் கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மேலும், விளையாட்டு ஒழுக்கம் மற்றும் உடற்தகுதி வளர்ச்சியில் கிக் பாக்சிங் போன்ற விளையாட்டுகளின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். இதன் மூலம் மாவட்டத்திலிருந்து மாநில மட்டத்துக்கு முன்னேறும் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவது நோக்கமாக உள்ளதாகவும் கூறினர். போட்டியை வெற்றிகரமாக நடத்த உதவிய நடுவர்கள், பயிற்சியாளர்கள், பெற்றோர் மற்றும் தன்னார்வலர்களுக்கு அமைப்பாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வு கோவை மாவட்டத்தில் கிக் பாக்சிங் விளையாட்டின் வளர்ச்சிக்கு புதிய ஊக்கமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது..



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கொல்லம்பாளையம்பகுதி வார்டு 56 ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு ஒன்றியம் பேரோடு ஊராட்சி பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கொல்லம்பாளையம்பகுதி வார்டு 56 ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.04.2026)மாவட்டஆட்சியர்அலுவலகமுகாம்இல்லத்தில்உறவினரான(மனைவியின் தாயார்) பொன்னி தபால் வாக்கு செலுத்தியதை பார்வையிட்டு பணியினை துவக்கி வைத்தார்.




ஈரோடு மாவட்டம் ஆனக்கல் பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் (11.04.2026) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் சூரம்பட்டிபகுதி வார்டு 48 ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முகாம் இல்லத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உறவினரான (மனைவியின் தாயார்) பொன்னி தபால் வாக்கு செலுத்தி தனது ஜனநாயக கடமையினை ஆற்றினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.04.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதி, வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் தபால் வாக்கு வைக்கும் பாதுகாப்பு இருப்பறையினை கண்காணிப்பு கேமிராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு மாவட்டம் பவானிசாகர் தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி அதிமுக வேட்பாளர் பண்ணாரி அகில இந்திய விஷ்வகர்மா பேரவை ஆதரவு



சென்னையை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வரும் அகில இந்திய விஸ்வகர்மா பேரவையின் ஈரோடு நிர்வாகிகள் கூட்டம் மற்றும் நிர்வாக குழு கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர் ஈஸ்வரமூர்த்திதலைமைதாங்கினார்.இந்தநிகழ்வில் மாவட்ட செயலாளர் ஆர்.மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பொருளாளர் சங்கர் மேற்பார்வையில் இந்த கூட்டம் நடைபெற்றது இதில் வீடு இல்லாதவர்களுக்கு இட வசதி செய்து தரவும் மற்றும் ஐந்து தொழில் செய்து வருவதற்கு தொழில் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் நடைபெற இருக்கின்ற சட்டமன்ற பொது தேர்தலில் மாநில தலைமையை பின்பற்றி பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளது பவானிசாகர் சட்டமன்றஉறுப்பினர்ஏ.பண்ணாரிஇந்தப்பகுதியைச் சார்ந்த அகில இந்திய விஸ்வகர்மா பேரவை உறுப்பினர்கள் ஆதரவளிப்பது என முடிவு எடுக்கப்பட்டு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது .

# ‘We just want fair wages... Why are police beating us?’: Workers at Noida protest



*Smoke hung over Noida's industrial skyline on Monday as a three-day-long workers' agitation over low wages spiralled into vandalism and clashes. It left behind burnt vehicles and blocked roads. The unrest intensified after a some female workers were allegedly hit during police action.*

*In Noida's Phase 2 industrial area, workers gathered in large numbers, blocking arterial roads in Sectors 1, 60 and 84. Traffic ground to a halt as anger spilled onto the streets. What began as a demand for better wages soon escalated after a police crackdown using tear gas and lathi charge led to arson, vandalism and stone-pelting. Several vehicles were set ablaze and others damaged during the clashes.*

*A woman protester told news agency ANI, "I work at Motherson. They are paying us less salary. We want more. When we staged a sit-in protest, they beat us up with no fault of ours. Cylinders, vegetables and everything are expensive."*

*She added, "I was hit in my legs. I demand that we be paid 20,000 as salary. Only then can we sustain ourselves; otherwise, the protest will continue." Another protester, speaking to PTI, said, "The government had promised to increase our salary. Why isn't the government increasing our wage? Why are the policemen beating women with sticks? What is the need for a lathi charge?"*

*The agitation, led largely by workers from the Hosiery Complex and other manufacturing units, has been driven by demands for wage parity with neighbouring Haryana and improved working conditions. For many, the demand is a salary they believe can keep pace with inflation.*

*Videos circulating from the scene showed chaotic moments, including a man being dragged away by police as others shouted in protest.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.